## குளித்தலை நகராட்சி

2023ஆம் வருடம் ஜுலை மாதம் 31.ஆம் தேதி திங்கட்க்கிழமை காலை 11.00 மணிக்கு குளித்தலை நகராட்சி நகர்மன்ற கூடத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் பற்றி முடிவுசெய்ய நகர்மன்ற சாதாரணக்கூட்டம் நடைபெற உள்ளது. அதுசமயம் தாங்கள் தவறாது கலந்துகொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்றத் தலைவர்,
குளித்தலை நகராட்சி.

-------

பொருள்-01. தமிழ்நாட்டில் நகர்ப்புறப் பகுதிகள் (மாநகராட்சி/நகராட்சி/பேரூராட்சி) மற்றும் ஊரகப் பகுதிகளில் செயல்படும் அனைத்து அரசுப் பள்ளிகளில் பயிலும் தொடக்கப்பள்ளி (1 முதல் 5ஆம் வகுப்பு வரை) மாணவ மாணவியருக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை 2023-2024ஆம் ஆண்டு முதல் விரிவுபடுத்துதல் சம்பந்தமான, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4-1) துறை அரசாணை (நிலை) எண்.33, நாள்-07.06.2023, மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்-02. நகராட்சிகளின் நிலைகளுக்கேற்ப பணியிடங்களுக்கான வரையறை நிர்ணயம் செய்து அதற்கேற்ப புதிய பணியிடங்களை தோற்றுவித்தல் மற்றும் ஏற்கனவே உள்ள பணியிடங்களை முறைப்படுத்துதல் சம்பந்தமான, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.1) துறை அரசாணை(நிலை) எண்.10, நாள்-23.01.2023, மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.811/2023/சி1)

பொருள்-03. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மேயர்கள், துணை மேயர்கள், மன்றத் தலைவர்கள், மன்றத் துணைத் தலைவர்கள் மற்றும் மன்ற உறுப்பினர்களுக்கு மாதந்தோறும் மதிப்பூதியம் வழங்குதல் சம்பந்தமான, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(தேர்தல்) துறை அரசாணை(நிலை) எண்.98, நாள்-13.07.2023 மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்-04. குளித்தலை நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையர்(பொ) அவர்களின் மே-2023 மற்றும் ஜுன்-2023ஆம் மாதங்களின் தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் பதிவு செய்யலாம்.

| | |
|---|---|
| பொருள்-05. | இந்நகராட்சி ஆண்டார்மெயின்ரோடு தெருவில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான கடைகளுககு தினசரி நாள் வாடகை உயர்வு செய்தது தொடர்பாக திரு.நாகராஜன் என்பவர், மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் (O.S.No.200/2016) தொடர்ந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. மேலும், Judgement Copy பெற, மனு தாக்கல் செய்து பெறுவதற்கும் மற்றும் வழக்கறிஞர் கட்டணம் ஆகியவைக்கு தொகை ரூ.6,000/-ம் (ரூபாய் ஆறாயிரம் மட்டும்) நகராட்சி வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| அலுவலக குறிப்பு- | 1). மன்றம் அனுமதிக்கலாம்.<br>2). இச்செலவினத்தை பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.458/2017/அ1) |

| | |
|---|---|
| பொருள்-06. | குளித்தலை நகராட்சிப் பகுதியில் குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு ட்டம் 2022-2023ன்கீழ், ரூ.30,00,000/- (ரூபாய் முப்பது லட்சம் மட்டும்) லட்சம் மதிப்பீட்டில பேவர் பிளாக் சாலைகள் அமைக்கும் பணிக்கு 17.03.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. |

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| 1) | குளித்தலை நகராட்சிக்குட்பட்ட அண்ணாநகர் புறவழிச்சாலை பகுதியில் நூலகம்முதல் 10வது குறுக்குத்தெரு வரை பேவர்பிளாக் அமைத்தல் | திரு.பி.அண்ணாதுரை | 0.05% குறைவு |
| | | திரு.எம்.செந்தில்குமார் | 0.28% அதிகம் |
| 2) | குளித்தலை நகராட்சிக்குட்பட்ட அண்ணாநகர் புறவழிச்சாலை பகுதியில் 10வது குறுக்குத்தெருமுதல் வெல்டிங் பட்டறை வரை பேவர்பிளாக் அமைத்தல் | திரு.எம்.செந்தில்குமார் | 0.28% அதிகம் |
| | | திரு.பி.அண்ணாதுரை | 0.05% குறைவு |
| 3) | குளித்தலை நகராட்சிக்குட்பட்ட அண்ணாநகர் புறவழிச்சாலை பகுதியில் வெல்டிங்பட்டறைமுதல் இரயில்வே கேட் வரை பேவர்பிளாக் அமைத்தல் | திரு.எம்.செந்தில்குமார் | 0.28% அதிகம் |
| | | திரு.பி.அண்ணாதுரை | 0.05% குறைவு |

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு- | மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், மதிப்பீட்டைவிட 0.05% குறைவாக குறிப்பிட்டுள்ள திரு.பி.அண்ணாதுரை என்பவரின் ஒப்பந்தப்புள்யை ஏற்கலாம்.<br>(ந.க.எண்.296/2022/இ1) |

பொருள்-07. குளித்தலை நகராட்சிப் பகுதியில் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் பொதுசுகதாரம் குறித்து, பொதுமக்களுக்கு கலைநிகழ்ச்சிகள்மூலம் விழிப்புணர்வுகள் ஏற்படுத்த, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் ந.க.1099/2023/பி1 எண்ணிட்ட 13.03.2023ஆம் தேதிய கடிதத்தில் அறிவுரை வழங்கியுள்ளார்கள். எனவே, இந்நகராட்சிப் பகுதியில் பொது சுகாதாரம் குறித்து பொதுமக்களுக்கு கலைநிகழ்ச்சிகள்மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்த ஆகும் உத்தேச செலவினம் ரூ.15,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.

2). பொதுமக்களின் பொது சுகாதார நலன் கருதி, நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று விழிப்புணர்வு கலைநிகழ்ச்சிகள் நடத்தியமைக்கும், வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டதையும் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.449/2023/எச்1)

பொருள்-08. இந்நகராட்சியில், பொது சுகாதாரப்பிரிவில் கொசு ஒழிப்பு பணிக்காக டெங்கு தடுப்பு நடவடிக்கையான கொசு புழுக்களை ஒழிப்பதற்கு 2023-2024ஆம் ஆண்டிற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் பரிந்துரையின்படி, அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்து கொசுப்புழுக்கொல்லி Abate மருந்து 100-லிட்டர் வாங்குவதற்கும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.85,000/-க்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1).மன்றம் அனுமதிக்கலாம்.

2). செலவினத்தை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1021/2023/எச்1)

பொருள்-09. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு கொசு ஒழிப்பு பணிக்காக, முதிர்வு கொசுக்களை ஒழிப்பதற்கு புகை மருந்து அடிக்க 2023-2024ஆம் ஆண்டுக்கு அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடம், “பைரித்ரம் 2% Ext” மருந்து 100-லிட்டர் வாங்குவதற்கும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.1,20,000/-க்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1).மன்றம் அனுமதிக்கலாம்.

2). செலவினத்தை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1022/2023/எச்1)

..4..

பொருள்- 10. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு கொசு ஒழிப்பு பணிக்காக, கொசு புழுக்களை ஒழிப்பதற்கு 2023-2024ஆம் ஆண்டுக்கு அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடம், "பேசில்லஸ் துரின்ஜியென்ஸிஸ்" கொசு புழுக்கொல்லி திரவ மருந்து 100-லிட்டர் வாங்குவதற்கும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.1,92,000-க்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

1).மன்றம் அனுமதிக்கலாம்.

2). செலவினத்தை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1023/2023/எச்1)

பொருள்- 11. குளித்தலை நகராட்சி பகுதிகளில் அமைந்துள்ள நாளொன்றுக்கு சராசரியாக 100 கிலோவிற்கு அதிகமாக அளவுள்ள திடக்கழிவுகளை உருவாக்குபவக்ள் அல்லது 5000 சதுர அடி பரப்பளவு கொண்ட கட்டடங்களை பயன்படுத்தும் மத்திய அரசுத்துறைகள், நிறுவனங்கள், மாநில அரசுத்துறை நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், மருத்துவ மனைகள், மருத்துச சிகிச்சை நிலையங்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் இதர கல்வி நிலையங்கள், மாணவர் விடுதிகள், வர்த்தக நிறுவனங்கள் (ஷாப்பிங் மால்கள்), வழிபாட்டுத் தலங்கள், விளையாட்டு அரங்குகள், விளையாட்டு வளாகங்கள், துணி விற்பனையாளர்கள், உணவு விடுதிகள், வியாபார நிறுவனங்கள் ஆகியோர் மற்றும் சந்தை ஒப்பந்தம் எடுத்தோர் ஆகியோர் அதிக கழிவுகளை உருவாக்குபவர்கள் (Bulk Waste Genertors) என வகைப்படுத்துப்பட்டுள்ளது. எனவே, மேற்குறிப்பிடப்பட்ட வணிக பகுதிகள் அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்கள், குடியிருப்புகளில் 100 கிலோவிற்கு அதிகமாக கழிவுகள் உருவாக்குபவர்கள் அல்லது 5000 சதுர அடி பரப்பளவு கொண்ட நிறுவனத்தார் நகராட்சி அலுவலகத்தில் அனுதி பதிவு செய்து தங்கள் வளாகத்திற்குள் உருவாகும் கழிவுகளை செயலாக்கம் செய்து மறுசுழற்சி செய்வதற்கு ஏற்ப உள் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி கொள்வதற்கு தினசரி நாளிதழில் விளம்பரம் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.15,500/-க்கு மன்றம் அனுமதி வேண்டபப்படுகிறது.

அலுவல குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.

2). இச்செலவினம் வருவாய நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1041/2023/எச்1)

..5..

பொருள்-12. இந்நகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் 2023-2024ஆம் ஆண்டுக்கு அலுவலக வேலையின் காரணமாக வெளியூர் சென்று வருவதற்கு பயணப்படி வழங்க வேண்டியுள்ளது. அதற்கான உத்தேச செலவினம் ரூ.3,00,000/-க்கு (ரூபாய் மூன்று லட்சம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டபடுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்காணும் செலவினம் வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.936/2023/அ1)

பொருள்-13. இந்நகராட்சி 2023-2024ஆம் ஆண்டுக்கு தேவையான படிவங்கள், பதிவேடுகள், ரசீதுகள் அனைத்து பிரிவுக்கும் தேவையான பேப்பர்கள் மற்றும் எழுது பொருட்கள் ஆகியவற்றினை தேவைக்கேற்ப அவ்வப்போது அரசு சார்பு நிறுவனமான தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்ட்கோ சர்வ், திருச்சியில் வாங்கி வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.4,00,000/-க்கு (ரூபாய் நான்கு லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்காணும் செலவினம் பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.937/2023/அ1)

பொருள்-14. குளித்தலை நகராட்சி வார்டு எண்.1 முதல் 24 வரை உள்ள வார்டுகளில் புதியதாக கட்டப்படும் கட்டிடங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டும் மற்றும் பழைய கட்டிடங்களை இடிக்கும் கழிவுகளை குளித்தலை நகராட்சிக்கு சொந்தமான, அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பகுதியில் கொட்டுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, நகராட்சிப் பகுதியில் அங்கங்கே கட்டிட கழிவுகள் பொதுமக்களுக்கு இடையூறாக இடத்தில் கொட்டப்பட்டு வருகின்றது. இதனால் பொதுமக்களுக்கு சுகாதார சீர்கேடுகள் ஏற்படுகிறது. எனவே, இனிவரும் காலங்களில் கட்டிட கழிவுகளை கட்டிட உரிமையாளர்கள் தங்கள் சொந்த செலவில் சத்தியமங்கலம் உரக்கிடங்கில் அதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் கொட்டுமாறு தெரிவிக்கப்படுகிறது. மேலும், நகராட்சி பகுதியில் கட்டிட கழிவுகள் பொதுமக்களுக்கு இடையூறாக கொட்டுவதை தவிர்க்கப்பட வேண்டும். மீறி கொட்டப்படும் கட்டிட உரிமதாரருக்கு, கழிவுகளுக்கு 1 லோடுக்கு ரூ.10000/- அபராதம் விதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1056/2023/பி2)

பொருள்- 15. குளித்தலை நகராட்சி மூலம் நகரப்பகுதிகளில் விளம்பரத் தட்டிகள் வைக்க அனுமதி வழங்கும் அதிகாரம் நகர உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த சட்ட திருத்தம் மற்றும் விதிகள் குறித்து அனைத்து பொதுமக்களுக்கும் தெரியும்வண்ணம் உரிய முறை விளம்பரப்படுத்துமாறு தெரிவிக்கப்பட்டது.

நகரினை தூய்மைப்படுத்த நகராட்சி அனுமதியின்றி வைக்கப்பட்டுள்ள விளம்பர பேனர்கள் மற்றும் நகராட்சி அனுமதியில்லாமல் தட்டிகள், பிளக்ஸ், விளம்பர பேனர்கள் குறித்து உடனடியாக கணக்கெடுப்பு நடத்தி, அவற்றினை உடனடியாக அகற்றுமாறும் இல்லை எனில் விளம்பர பேனர்கள் வைத்த நிறுவத்திற்கு உடனடியாக அபராதம் ரூ.1000/- விதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1057/2023/பி2)

பொருள்- 16. குளித்தலை நகராட்சிப் பகுதியில் பொது சுகாதாரப்பணி, தூய்மை பணி மற்றும் டெங்கு தடுப்புப்பணியின் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்வதற்கும், கிருமி நாசினி பொருட்கள் கொள்முதல் செய்ய 2023-2024ஆம் ஆண்டிற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,75,000/-க்கு (ரூபாய் மூன்று லட்சத்து எழுபத்தைந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1).மன்றம் அனுமதிக்கலாம்.
2). செலவினத்தை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1091/2023/எச்1)

பொருள்- 17. குளித்தலை நகராட்சி பேருந்து நிலையத்தில் கலைஞர் நகர்ப்புறமேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.74.00இலட்சம் மதிப்பீட்டில் அபிவிருத்தி பணி நடைபெற்று வருகிறது. பேருந்து நிலையத்தின் கீழ்புறத்தில் அமைந்துள்ள சங்கு ஒலிப்பான் கட்டிடம் மிகவும் பழுதடைந்துள்ளதாலும், பேருந்துகள் பேருந்து நிலையத்திற்குள் உள்ளே வருவதற்கு மிகவும் இடையூறாக உள்ளதாலும் பொதுமக்கள் நலன் கருதி மேற்கண்ட சங்கு ஒலிப்பான் கட்டிடத்தினை அகற்றுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.732/2022/இ1)

பொருள்- 18. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் பணிகள் மேற்கொள்ள அம்ருத்-2.0 திட்டத்தின்கீழ் குடிநீர் அபிவிருத்தி பணிகளை கண்காணித்து மேற்பார்வையிடுவதற்கு PROJECT MANAGEMENT CONSULTANT (PMC) ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்றதை அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1383/2022/இ1)

பொருள்- 19. குளித்தலை நகராட்சி பொது சுகாதார பிரிவு மற்றும் பொறியியல் பிரிவில் இயங்கி வந்த வாகனங்கள் 30.06.2023 அன்று கழிவு நீக்கம் செய்ய கீழ்க்கண்ட விவரப்படியான நாளிதழில் ஏல அறிவிப்பு வெளியிடப்பட்டது. எனவே, கீழ்க்கண்ட விவரப்படியான நாளிதழ் நிறுவனத்திற்கு தொகை வழங்க நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | நாளிதழ் விவரம் | வருமான வரி பிடித்தம் போக மீதத் தொகை ரூ. |
|---|---|---|
| 1) | தினத்தந்தி | 14818.00 |
| 2) | தினமலர் | 13224.00 |

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இச்செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.2702/2018/இ1)

பொருள்- 20. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட பெரியார்நகர் மற்றும் நாப்பாளையம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு Gas Chlorination முறையினை செயல்படுத்திட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ஒவ்வொன்றுக்கும் ரூ.11.25 இலட்சம் வீதம், கூடுதல் ரூ.22.50 இலட்சம் ஆகும். எனவே, மேற்கண்ட பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதி தலைப்பின்கீழ் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1103/2023/இ1)

பொருள்- **<u>நகர்மன்றத் தலைவர் திருமதி.P.சகுந்தலா அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.</u>**

21. இந்நகராட்சிப் பகுதியிலுள்ள பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படும் குடிநீர் கட்டணம் ஆண்டுதோறும் 5... கூடுதல் செய்யப்படுவதால், 01.10.2023 முதல் மாத கட்டணம் ரூ.148/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இக்கட்டணமானது அருகில் உள்ள நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்படும் குடிநீர் கட்டணத்தைவிட கூடுதலாக உள்ளது. எனவே, இக்கட்டணத்தை குறைத்து நிர்ணயம் செய்துதரக்கோரி பொதுமக்கள் கோரிக்கை அளித்து வருகின்றனர். எனவே, பொதுமக்களின் நலன்கருதி, ஆண்டுதோறும் 5... கூடுதல் செய்யப்படுவதை தவிர்த்து, நிரந்தரமாக மாதம் ஒன்றுக்கு ரூ.150/- என நிர்ணயம் செய்திட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1105/2023/இ1)

பொருள்- 22. குளித்தலை நகராட்சி வார்டு எண்.7, என்.ஜி.ஜி.ஓ.காலனி கம்பன்தெரு முதல், அண்ணா சமுதாய மன்றம் வரை பழுதடைந்துள்ள மழைநீர் வடிகாலினை பராமரிப்பு செய்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.4.90 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1).மன்றம் அனுமதிக்கலாம்.
2).செலவினத்தை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1106/2023/இ1)

பொருள்- 23. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மற்றும் பொறியியல் பிரிவில் இயங்கிவந்த வாகனங்களில், கழிவு நீக்கம் செய்யப்பட்ட வாகனங்களுக்கு உரிய விதிமுறைகளை பின்பற்றி, 30.06.2023 வெள்ளிக்கிழமை அன்று பொது ஏலம் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறான வாகனங்களை திரு.R.கிருஷ்ணமூர்த்தி என்பவர் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி கோரியுள்ளார். எனவே, அன்னாரின் ஏலக்கேள்வியை நகர்மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | வாகனத்தின் எண் மற்றும் விவரம் | ஏலக்கேள்வி தொகை ரூ. |
|---|---|---|
| 1) | Tipper Four Wheeler – (TN-47-X-0030) | 9300/- |
| 2) | Carrier Auto (TN-47-D-0937) | 9400/- |
| 3) | LMV Goods Vehicle (TN-47-C-6035) | 26300/- |
| 4) | Tipper (TN-47-D-1770) | 39400/- |
| 5) | Water Tanker (TN-47-E-0264) | 39900/- |

அலுவலக குறிப்பு- 1). மன்றம் ஏற்கலாம்.
2). மேற்கண்ட உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியை கோரிய திரு.R.கிருஷ்ணமூர்த்தி என்பவருக்கு, மேற்கண்ட வாகனங்களை ஒப்படைக்க மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.2702/2018/இ1)

பொருள்-24. குளித்தலை நகராட்சி கணினி பிரிவிற்கு புதியதாக கணினி, இதர பொருட்கள் வாங்கவும் மற்றும் இரண்டு கணினிகள் பழுது அடைந்ததை சரி செய்யவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.72157/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1).மன்றம் அனுமதிக்கலாம்.
2). செலவினத்தை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும், அவசர அவசியம் கருதி, கம்ப்யூட்டர் பார்க் நிறுவனத்தில் பணிகள் மேற்கொண்டதற்கு தொகை வழங்குவதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.691/2023/இ1)

பொருள்-25. குளித்தலை நகராட்சியில் அனைத்து பதிவுகளும் கணனியில் பதிவு செய்யப்பட்டு வருகிறது. கணனியில் உடனுக்குடன் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால், கணனி மற்றும் பிரிண்டர்கள் பழுது நீக்கம் செய்ய, டோனர்கள் வாங்க, கம்ப்யூட்டர் பார்க், கரூர் என்ற நிறுவனத்தின்மூலம் வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,50,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் ஏற்கலாம்.
2). மேற்காணும் செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1053/2023/இ1)

பொருள்-26. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட அண்ணா நகர் புறவழிச்சாலையில் சாலை மற்றும் நடைபாதை அமைக்கும் பணிக்கு இடையூறாக இருந்த மரங்களை அப்புறப்படுத்த, வட்டாச்சியர் அவர்களால் கள ஆய்வு செய்யப்பட்டு வருவாய் கோட்டாசியர் அவர்களின் அனுமதி பெற்று அகற்றப்பட்டது- மேற்கண்ட அகற்றப்பட்ட மரங்களை பொது ஏலம் விடுவதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

1)-மன்றம் அனுமதிக்கலாம்.
2).நகர் மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று மரங்களை அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.296/2022/இ1)

பொருள்- 27. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.7 காவேரி நகர் நுழைவு வாயில் தூண்கள் 50 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டதாகும். தற்போதைய பெருகிவரும் மக்கள் பெருக்கத்திற்கு தகுந்தவாறு சாலை பகுதிகள் விரிவுப்படுத்த வேண்டி இருப்பதால், போக்குவரத்திற்கும், பொதுமக்கள் பயன்பாட்டிற்கும் இடையூறாக உள்ள, மேற்கண்ட தூண்களை அதன் பழமையை கருத்திற்கொண்டும், இடித்து அப்புறப்படுத்த உண்டாகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1124/2023/இ1)

பொருள்- 28. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின்கீழ் குடும்பதலைவிகளுக்கான மாதந்தோறும் வழங்கப்படும் உதவித் தொகை ரூ.1000/- வழங்கும் திட்டம் செப்டம்பர் 2023 முதல் தமிழக முதலமைச்சர் அவர்களால் துவங்கப்பட உள்ளது. எனவே கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் குளித்தலை நகராட்சி பகுதியில் நடத்தப்படும் முகாம்களுக்கு அடிப்படை வசதிகள் செய்திட உண்டாகும் செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு – 1).மன்றம் அனுமதிக்கலாம்.
2).இச்செலவினத்தை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1143/2023/பி2)

பொருள்- 29. குளித்தலை நகராட்சிக்கு சொந்தமான சத்தியமங்கலம் உரக்கிடங்கில் உள்ள மரக்கன்றுகள், இந்நகராட்சியின்மூலம பராமரிக்கப்பட்டு வருகிறது. தற்போது தண்ணீர்பள்ளி என்ற ஊரில் உள்ள “விதைகள்” அறக்கட்டளை நிறுவனத்தினர் தாங்களே மேற்கண்ட மரக்கன்றுகளை பராமரிப்பதுடன், புதிய மரக்கன்றுகளை நட்டு இலவசமாக பராமரிப்பு மேற்கொள்ள அனுமதி கோரியுள்ளள்ளனர். எனவே, மேற்கண்ட மரக்கன்றுகள் பராமரிப்பினை “விதைகள்” அறக்கட்டளை, தண்ணீர்பள்ளி நிறுவனத்தினரிடம் ஒப்படைக்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1152/2023/இ1)

..11..

பொருள்- 30. குளித்தலை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பணிகள் மேற்கொள்ள நகர்மன்றத்தில் ஒப்புதல் வழங்கியதின் பேரில் கீழ்க்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி விவரம்.

| வ. எண் | பணி விவரம் | மதிப்பீட்டுத் தொகை (இலட்சம்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | வடக்கு முத்துராஜா தெரு பொது கழிப்பிடம் மராமத்து பணி செய்தல் | 4.80 இலட்சம் | ச.நித்யானந்தம், குளித்தலை | 0.09 % குறைவு |
| | | | அ.மாதேஸ்வரன், குளித்தலை | 1.01 % அதிகம் |
| 2. | செக்கடி புதுத்தெரு பொது கழிப்பிடம் மராமத்து பணி செய்தல் | 4.90 இலட்சம் | அ.மாதேஸ்வரன், குளித்தலை | 0.06 % குறைவு |
| | | | எம்.செந்தில்குமார், குளித்தலை | 1.02 % அதிகம் |
| 3. | சுங்ககேட் அருகில் கழிப்பிடம் கட்டுதல் | 4.95 இலட்சம் | எம்.செந்தில்குமார், குளித்தலை | 0.07 % குறைவு |
| | | | ஆர்.என்.வெங்கடாஜலபதி, குளித்தலை | 1.04 % அதிகம் |
| 4 | கிரி தெருவில் மழைநீர் வடிகால் மராமத்து செய்தல் | 4.90 இலட்சம் | அ.மாதேஸ்வரன், குளித்தலை | 0.05 % குறைவு |
| | | | எம்.செந்தில்குமார், குளித்தலை | 1.07 % அதிகம் |
| 5. | காங்கிரஸ் தெரு மழைநீர் வடிகால் மராமத்து பணி செய்தல் | 2.50 இலட்சம் | ஆர்.என்.வெங்கடாஜலபதி, குளித்தலை | 0.05 % குறைவு |
| | | | எம்.செந்தில்குமார், குளித்தலை | 1.09 % அதிகம் |
| 6. | கொல்லம்பட்டறை தெரு மற்றும் சின்ன ஆண்டார் தெருவில் மழைநீர் வடிகால் மராமத்து பணி செய்தல் | 2.45 இலட்சம் | ச.நித்யானந்தம், குளித்தலை | 0.09 % குறைவு |
| | | | அ.மாதேஸ்வரன், குளித்தலை | 1.10 % அதிகம் |
| 7. | ஆண்டார் மெயின் ரோடு தினசரி நாளங்காடி தரைதளம் மற்றும் முதல் தளத்தில் மராமத்து பணி செய்தல் | 4.80 இலட்சம் | எம்.செந்தில்குமார், குளித்தலை | 0.07 % குறைவு |
| | | | அ.மாதேஸ்வரன், குளித்தலை | 1.15 % அதிகம் |

மேற்கண்ட பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகைக்கு குறைவாக வரப்பெற்ற வரிசை எண்.1, 6 திரு.ச.நித்யானந்தம், குளித்தலை, வரிசை எண்.2, 4 திரு.அ.மாதேஸ்வரன், வரிசை எண்.3, 7 திரு.எம்.செந்தில்குமார், வரிசை எண்.5 திரு.ஆர்.என்.வெங்கடாஜலபதி ஆகிய ஒப்பந்தகாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.500/2022/இ1)

பொருள்-31. குளித்தலை நகராட்சிக்குட்பட்ட மாரியம்மன் கோவில் நடுநிலை பள்ளியில் முதல் தளத்தில் வகுப்பறை கட்டுதல் பணியை மேற்கொள்ள நகர்மன்றத்தில் ஒப்புதல் வழங்கியதின் பேரில் கீழ்க்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி விவரம் .

| வ. எண் | பணி விவரம் | மதிப்பீட்டுத் தொகை (இலட்சம்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | **<u>கல்வி நிதி-</u>** குளித்தலை நகராட்சி மாரியம்மன் கோவில் நடுநிலை பள்ளியில் முதல் தளத்தில் வகுப்பறை கட்டுதல் | 20.00 இலட்சம் | திரு.வி.பி.தனபால், குளித்தலை | 0.05 % குறைவு |
| | | | திரு.அ.மாதேஸ்வரன், குளித்தலை | 1.01 % அதிகம் |

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகைக்கு குறைவாக வரப்பெற்ற திரு.வி.பி.தனபால், குளித்தலை ஒப்பந்தகாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.819/2023/இ1)

பொருள்-32. குளித்தலை நகராட்சிப்பகுதியில் புதியதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு இடம் ஒதுக்கீடு செய்து வழங்க, துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள், கரூர் அவர்களின் கடிதம் ந.க.4758/நி5/2021 எண்ணிட்ட 10.05.2023ம் தேதிய கடிதத்தில் கோரியுள்ளார்கள். குளித்தலை நகராட்சிக்கு உட்பட்ட பெரியார்நகர் ஜெய்மஹால் அவென்யூ முதல்தெருவின் மேற்கு பகுதியில் புதியதாக ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் கட்டிடம் கட்டிக்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.523/2023/பி2)

பொருள்- 33. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில், பொதுமக்கள் நலன்கருதி, கீழ்க்கண்ட விபரப்படியான பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண். | பணியின் விவரம் | மதிப்பீடு (லட்சத்தில்) |
|---|---|---|
| | **<u>பொது நிதி-</u>** | |
| 1) | வார்டு எண்.1, மணத்தட்டை அரிசனத்தெரு பொதுக்கழிப்பிடம் மராமத்து பணி | 4.00 |
| 2) | வார்டு எண்.6, பகவதிஅம்மன்கோவில்தெரு பொதுக்கழிப்பிடம் மராமத்து பணி | 4.50 |
| 3) | வார்டு எண்.7, புதுக்கோர்ட்தெரு பொதுக்கழிப்பிடம் மராமத்து பணி | 2.00 |
| 4) | வார்டு எண்.13, சேதுரெத்தினம்பிள்ளைதெரு பொதுக்கழிப்பிடம் மராமத்து பணி | 3.00 |
| 5) | வார்டு எண்.20, உழவர்சந்தை பொதுக்கழிப்பிடம் மராமத்து பணி | 3.00 |
| 6) | அண்ணாநகர் புறவழிச்சாலை வடிகால் தூர் வாருதல் (பூங்காவிற்கான இடம் முதல் உழவர்சந்தை வரை) | 0.50 |
| | | |
| | **<u>குடிநீர் நிதி-</u>** | |
| 1) | வார்டு எண்.2, மணத்தட்டை கடைவீதி 3வது குறுக்குத்தெருவில் புதியதாக போர்வெல், சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல் | 2.00 |
| 2) | வார்டு எண்.2, சங்கிலிராயன்கோவில்தெரு மேற்குப்பகுதியில் புதியதாக போர்வெல், சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல் | 2.00 |
| 3) | வார்டு எண்.20, அண்ணாநகர் புறவழிச்சாலை பகுதியில் (நூலகம் அருகில்) புதியதாக போர்வெல், சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல் | 2.00 |

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.

2). மேற்கண்ட பணிகளுக்கான செலவினத்தை வருவாய் நிதி மற்றும் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1154/2023/இ1)

பொருள்- 34. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் இந்நகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள 4 பள்ளிகள் (துவக்கப்பள்ளி-1, நடுநிலைப்பள்ளிகள்-3), அரசு மகளிர் மேல்நிலைப்பள்டளி மற்றும் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி ஆகிய 6-பள்ளிகளில் உள்ள கழிவறை சுத்தம் மற்றும் தூய்மை பணிகள் மேற்கொள்ளுதல் அவசியமாகின்றது. அரசாணை(நிலை) எண்.166, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்-23.11.2016 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.32050/2016/ஜே2, நாள்-26.10.2017ன்படி, ஒவ்வொரு பள்ளிகளுக்கும் சுய உதவிக்குழுவினர்மூலம் தலா 2-நபர்கள் வீதம், கழிவறை சுத்தம் மற்றும் தூய்மை பணிகளை நிபந்தனைகளுக்குட்பட்டு பணி மேற்கொள்வதற்கும், கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட 2022-2023ஆம் ஆண்டுக்கான ஊதிய தர விலை அடிப்படையிலும் செலவினம் (ஊதியம்) மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.

2). மேற்கண்ட செலவினத்தை 2023-2024ஆம் ஆண்டுக்கான கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1153/2023/எச்1)

பொருள்- 35. குளித்தலை நகராட்சிக்கு சொந்தமான நாப்பாளையம் மற்றும் பெரியார்நகர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளின்மூலம் பொதுமக்களுக்கு பாதுகாப்பான முறையில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இத்தொட்டிகளில் குடிநீர் ஏற்றும்போது, தொட்டி நிரம்புதல், நீர் உள்ள விபரம், தண்ணீர் இன்றி ஏற்படும் நிலை, மின்சார பயன்பாடு மற்றும் இதர காரணங்களுக்காக, Smart Water Management System மூலம் குடிநீர் சம்பந்தமான பிரச்சனைகளை எளிதில் கண்டறிந்து தீர்வு காண அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/-த்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

1). மன்றம் அனுமதிக்கலாம்.

2). செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1175/2023/இ1)

பொருள்- 36. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில், காற்று மற்றும் மழையினால் கீழே விழும் மரங்களை, அவ்வப்போது பொது ஏலம் விடுவதற்கும், உத்தேச செலவினம் ரூ.1,00,000/-த்திற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.

2). மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.296/2023/இ1)

பொருள்- 37. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட அரசு மருத்துவ மனைக்கு, நமக்கு நாமே திட்டத்தின்கீழ் ரூ.31.13 லட்சத்தில் உபகரணங்கள் வாங்கி வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது அனைத்து உபகரணங்கள் வாங்கப்பட்டுள்ளது. வாங்கியதற்கான செலவினத் தொகை ரூ.31,95,660/- ஆகும். தற்போது இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட தொகைக்கு கூடுதலாக செலவினம் மேற்கொள்ள வேண்டியுள்ளதால், கூடுதல் செலவினத் தொகை ரூ.83,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). கூடுதல் செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1584/2021/இ1)

பொருள்- 38. குளித்தலை நகராட்சி பேருந்து நிலையத்திற்குள் ஆட்டோ, கார், வேன் போன்ற வாகனங்கள் பயணிகளை ஏற்றி செல்லுதல், இறக்கிவிடுதல் போன்ற நிகழ்வுகளுக்கு நுழைவு கட்டணம் கீழ்க்கண்ட விபரப்படி கட்டணம் செலுத்த வேண்டும்

| வ. எண். | வாகன விபரம் | பேருந்து நிலையத்திற்குள் ஒருமுறை வந்து செல்லுவதற்கான கட்டணம் |
|---|---|---|
| 1) | ஆட்டோ | ரூ.20.00 |
| 2) | கார் | ரூ.30.00 |
| 3) | வேன் | ரூ.30.00 |

மேலும், பேருந்து நிலையத்திற்குள், ஆட்டோ, கார், வேன் போன்ற வாகனங்கள் நிறுத்துவதற்கு அனுமதியில்லை. எனவே, வாகனங்களை பேருந்து நிலையத்திற்குள் 10 நிமிடங்களுக்குமேல் நிறுத்தினால் ஒருமுறை கட்டணமாக ரூ.1000/- அபராதம் விதிக்கப்பட்டு வசூல் செய்யப்படும். மேற்கண்ட விபரப்படி கட்டணம் வசூல் செய்யவும், அனுமதியின்றி நிறுத்தப்படும் வாகன உரிமையாளர்களுக்கு அபராதம் விதித்து வசூல் செய்யவும், இதற்கான அறிவிப்பினை (Flex மூலம்) பேருந்து நிலையத்தில் அமைக்கவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.622/2023/பி2)

பொருள்-39. குளித்தலை நகராட்சி பேருந்து நிலையமானது அருள்மிகு பேராளகுந்தாளம்மன் திருக்கோவிலுக்கு சொந்தமான 1.22 ஏக்கர் பரப்பளவு இடத்தில் ஒப்பந்த வாடகை அடிப்படையில் இயங்கி வருகிறது. இப்பேருந்து நிலையத்தில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.74.00இலட்சம் மதிப்பீட்டில் அபிவிருத்தி பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த பேருந்து நிலையத்தில் பல ஆண்டுகளாக உள்ள ஆக்கிரமிப்புகளால் பணிகள் மேற்கொள்வதில் இடையூறு ஏற்படுகிறது. எனவே, பொதுமக்கள் நலன்கருதி மேற்கொள்ளப்படும் பேருந்து நிலைய அபிவிருத்தி பணிகளுக்கு இடையூறாக உள்ள ஆக்கிரமிப்புகளை இடித்து அப்புறப்படுத்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் பேருந்து நிலைய அபிவிருத்தி பணிகளின் அவசியம் கருதியும், பொதுமக்கள் நலன் கருதியும், நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஆக்கிரமிப்புகள் அகற்றியதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.732/2022/இ1)

பொருள்-40 **<u>நகர்மன்றத் தலைவர் திருமதி.P.சகுந்தலா அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.</u>**

தமிழ்நாடு நகர்ப்புற பிரதிநிதிகளுக்கு மாதந்தோறும் மதிப்பூதியம் வழங்கிட அரசாணை (நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(தேர்தல்) துறை அரசாணை(நிலை) எண்.98, நாள்-13.07.2023) பிறப்பித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், தமிழக அரசுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்வதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்-41. **<u>நகர்மன்றத் தலைவர், நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.</u>**

குளித்தலை நகராட்சி பேருந்து நிலையத்தில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.74.00 லட்சம் மதிப்பீட்டில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பேருந்து நிலையத்திற்கு குளித்தலை நகராட்சி கலைஞர் நூற்றாண்டு விழா பேருந்து நிலையம் என பெயர் வைப்பதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் முடிவு செய்யலாம்.
(ந.க.எண்.732/2022/இ1)

******

**குளித்தலை நகராட்சி**

**குளித்தலை நகர்மன்றத்தின் 31.07.2023ஆம் தேதிய**

**சாதாரணக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்**

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 183 | பதிவு செய்யப்பட்டது. |
| 2 | 2 | 184 | பதிவு செய்யப்பட்டது. |
| 3 | 3 | 185 | பதிவு செய்யப்பட்டது. |
| 4 | 4 | 186 | பதிவு செய்யப்பட்டது. |
| 5 | 5 | 187 | அனுமதிக்கப்பட்டது. |
| 6 | 6 | 188 | ஏற்கப்பட்டது. |
| 7 | 7 | 189 | அங்கீகரிக்கப்பட்டது. |
| 8 | 8 | 190 | அனுமதிக்கபட்டது. |
| 9 | 9 | 191 | அனுமதிக்கபட்டது. |
| 10 | 10 | 192 | அனுமதிக்கபட்டது. |
| 11 | 11 | 193 | அனுமதிக்கபட்டது. |
| 12 | 12 | 194 | அனுமதிக்கபட்டது. |
| 13 | 13 | 195 | அனுமதிக்கபட்டது. |
| 14 | 14 | 196 | அனுமதிக்கபட்டது. |
| 15 | 15 | 197 | அனுமதிக்கபட்டது. |
| 16 | 16 | 198 | அனுமதிக்கபட்டது. |
| 17 | 17 | 199 | அனுமதிக்கபட்டது. |
| 18 | 18 | 200 | அனுமதிக்கபட்டது. |
| 19 | 19 | 201 | அனுமதிக்கபட்டது. |
| 20 | 20 | 202 | அனுமதிக்கபட்டது. |
| 21 | 21 | 203 | அனுமதிக்கபட்டது. |
| 22 | 22 | 204 | அனுமதிக்கபட்டது. |
| 23 | 23 | 205 | அனுமதிக்கபட்டது. |
| 24 | 24 | 206 | அனுமதிக்கபட்டது. |
| 25 | 25 | 207 | அனுமதிக்கபட்டது. |
| 26 | 26 | 208 | அனுமதிக்கபட்டது. |
| 27 | 27 | 209 | அனுமதிக்கபட்டது. |
| 28 | 28 | 210 | அனுமதிக்கபட்டது. |
| 29 | 29 | 211 | அனுமதிக்கபட்டது. |
| 30 | 30 | 212 | அனுமதிக்கபட்டது. |

| | | | |
|---|---|---|---|
| 31 | 31 | 213 | அனுமதிக்கபட்டது. |
| 32 | 32 | 214 | அனுமதிக்கபட்டது. |
| 33 | 33 | 215 | அனுமதிக்கபட்டது. |
| 34 | 34 | 216 | அனுமதிக்கபட்டது. |
| 35 | 35 | 217 | அனுமதிக்கபட்டது. |
| 36 | 36 | 218 | அனுமதிக்கபட்டது. |
| 37 | 37 | 219 | அனுமதிக்கபட்டது. |
| 38 | 38 | 220 | அனுமதிக்கபட்டது. |
| 39 | 39 | 221 | அனுமதிக்கபட்டது. |
| 40 | 40 | 222 | பதிவு செய்யப்பட்டது. |
| 41 | 41 | 223 | குளித்தலை நகராட்சி கலைஞர் நூற்றாண்டு விழா பேருந்து நிலையம் என பெயர் வைப்பதற்கு மன்றம் முடிவு செய்யபட்டது. |

ஒம்/-P.சகுந்தலா,
நகர்மன்றத் தலைவர்,
குளித்தலை நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையர்(பொ),
குளித்தலை நகராட்சி.